# பொதுப் பணித் துறை கட்டடங்களை ஆய்வு செய்து தகவல் தளத்தை உருவாக்க வேண்டும்

## அப்துல் கலாம்

**சென்னை, செப்.5:** பொதுப் பணித் துறை கடந்த 50 ஆண்டுகளில் கட்டியுள்ள பல்வேறு கட்டடங்களை ஆய்வு செய்து தகவல்தளத்தை (டேட்டாபேஸ்) தமிழ்நாடு பொறியியல் சங்கம் உருவாக்க வேண்டும் என்று குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அறிவுறுத்தினார். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில் வாழ்த்துரை வழங்கி அப்துல் கலாம் பேசியதாவது:

நவீன அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதில் பொறியாளர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். இத்தகைய பொறியாளர்களுக்கு ஊக்கமளித்து அவர்கள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்ற தமிழ்நாடு பொறியியல் சங்கம் முக்கிய காரணமாக விளங்குகிறது. நூற்றாண்டை நிறைவு செய்துள்ள இந்த சங்கத்துக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கிறேன். பொறியாளர்களில், பட்டதாரிகள், பட்டயம் பெற்றவர்கள் என்ற பாகுபாடு தேவையில்லை என கருதுகிறேன். நான் கூட ஒருவகையில் பொறியியலில் பட்டயம் பெற்றவன்தான். கடந்த 1957-ஆம் ஆண்டு மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (எம்.ஐ.டி.) ஏரோநாட்டிக்கல் பொறியியல் பிரிவில் பட்டயம் பெற்றேன் என்பதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

கடந்த 50 ஆண்டுகளில் பொதுப் பணித் துறை கட்டியுள்ள கட்டடங்களை ஆய்வு செய்து ஓர் தகவல்தளத்தை தமிழ்நாடு பொறியியல் சங்கம் உருவாக்க வேண்டும். பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில், ஒரு சதுர அடி கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கட்டுமான மூலப்பொருள்களின் அளவு, மனித ஆற்றல் செலவு உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக்கொண்டு அந்த ஆய்வை மேற்கொள்ள வேண்டும். மேலும் தீ விபத்து, சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களை அந்த கட்டடங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றன போன்ற அம்சங்களும் அந்த ஆய்வில் இடம் பெற வேண்டும். இந்த ஆய்வு முடிவுகளுடன் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டுமானத் துறையை பொறியாளர்கள் அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

சூரிய மின் உற்பத்தி, தண்ணீர் மறுசுழற்சி போன்றவற்றின் மூலம் மின்சாரம், தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டடங்களை கட்டுவதை பொறியாளர்கள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். மேலும் அந்த கட்டடங்கள், மாற்றுத் திறனாளிகளுக்குவசதியாக இருக்கும்படியும், எவ்வித இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையிலும் கட்டப்பட வேண்டும் என்றார் அப்துல் கலாம்.



தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா மலரை குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம் வெளியிட, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் ஐயம்பெருமாள் பெற்றுக்கொள்கிறார். உடன் (இடமிருந்து) தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. முருகேசன், தமிழ்நாடு இசை-கவின் கலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் வீணை காயத்ரி.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் செயல் இயக்குநர் பி.ஐயம்பெருமாள் பேசுகையில், மருத்துவர்கள், வழக்குரைஞர்களுக்கு உள்ளதைப் போல பொறியாளர்களுக்கும் தனி அடையாளம் (எம்பளம்) வழங்கப்பட வேண்டும் என்றார்.

முன்னதாக, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழா மலரை, அப்துல் கலாம் வெளியிட, ஐயம்பெருமாள் பெற்றுக் கொண்டார். நெல்லை ஜெயந்தா, அரவிந்த் சித்தார்த் ஆகியோர் எழுதிய நூற்றாண்டு விழா வாழ்த்து பாடல்கள் அடங்கிய குறுந்தகடும் வெளியிடப்பட்டது.

விழாவில், தமிழ்நாடு இசை-கவின் கலை பல்கலைக்கழக துணைவேந்தர் இ.காயத்ரி, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எஸ்.கௌரி சங்கர், துணைத் தலைவர் பஞ்சவர்ணம், பொதுச் செயலர் டி.முருகேசன், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.